RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 228 | ஆகஸ்டு.20 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## பிஹார் வாக்காளர் பட்டியலில் நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் பெயர்கள் வெளியீடு: தேர்தல் ஆணையம் நடவடிக்கை




பாட்னா, ஆக.20-

பிஹார் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் பெயர், விவரங்களை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

பிஹாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணி மேற்கொள்ளப்பட்டுகடந்த 1ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் 7.24 கோடி பேரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. 65 லட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. அவர்களில் 22 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தவர்கள், 36 லட்சம் பேர் நிரந்தரமாக இடம்பெயர்ந்துவிட்டனர். இதனால் அவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என்று தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்தது.

இதற்கிடையே, பிஹார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணியை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. சில நாட்களுக்கு முன்புஇந்த வழக்கை விசாரித்த 3 நீதிபதிகள் அமர்வு, வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் பெயர்விவரங்களை வெளியிட வேண்டும் என்று உத்தரவிட்டது.


இதை தொடர்ந்து, வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட 65 லட்சம் பேரின் பெயர், விவரங்களை தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் இணையத்தில் வெளியிட்டது.இதுகுறித்து பிஹார் தலைமை தேர்தல் அதிகாரி வினோத் சிங் வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது: உச்ச நீதிமன்றம் உத்தரவிட்ட 56 மணிநேரத்தில், 65 லட்சம் பேரின் விவரங்களை தேர்தல் ஆணைய இணையத்தில் பதிவேற்றம் செய்துள்ளோம். தொகுதி வாரியாக, வாக்குச்சாவடி வாரியாக பெயர், விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. எதற்காக பெயர் நீக்கப்பட்டது என்பதற்கான காரணமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து ராஷ்டிரிய ஜனதா தள தலைவர்கள் கூறும்போது, "பிஹார் முழுவதும் வாக்காளர்களிடம் இண்டியா கூட்டணி தலைவர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். எதிர்க்கட்சிகளின் அழுத்தம் காரணமாக 65 லட்சம் பேரின் பெயர், விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன" என்றனர்.

தேர்தல் ஆணைய வட்டாரங்கள் கூறியபோது, ''வாக்காளர் வரைவு பட்டியலில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக ஆகஸ்ட் 1 முதல் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. செப்டம்பர் 1 வரை திருத்தம் கோரி விண்ணப்பங்களை அளிக்கலாம். இதன் மீதான பரிசீலனை செப்டம்பர் 25ம் தேதிக்குள் நிறைவடையும். செப்டம்பர் 30ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். இதுதொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. செப்டம்பர் 25ம் தேதிக்குள் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த தீர்ப்பின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று தெரிவித்துள்ளன.

## சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் ரூ.28.70 கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடம் அடுத்த மாதம் பயன்பாட்டுக்கு வரும்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



சென்னை, ஆக.20-

சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் ரூ.28.70 கோடியில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடம் அடுத்த மாதம் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்று சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னை சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் மற்றும் மருத்துவ உபகரணங்களை சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் சித்ரா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

அப்போது, அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்த அரசு மருத்துவமனை 120 ஆண்டுகளைக் கடந்த ஒரு பழமையான மருத்துவமனை ஆகும். இந்த மருத்துவமனையில் சைதாப்பேட்டையில் இருப்பவர்கள் மட்டுமின்றி, மடிப்பாக்கம், உள்ளகரம், புழுதிவாக்கம், பள்ளிக்கரணை, ஜல்லடியான்பேட்டை, சோழிங்கநல்லூர், அக்கரை போன்று பல்வேறு இடங்களிலிருந்தும் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். ரூ.28.70 கோடியில் 68,920 சதுர அடி பரப்பளவில் புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

தரைத்தளம் மற்றும் 6 தளங்கள் கொண்ட இந்தக் கட்டிடத்தில் பல்வேறு வசதிகள் வரவுள்ளன. ரோட்டரி சங்கத்தின் சார்பில் 14 டயாலிசிஸ் இயந்திரங்கள் தற்போது மருத்துவமனையில் பயன்பாட்டில் உள்ளன. சென்னையின் பல்வேறு பகுதிகளிலிருந்து டயாலிசிஸ் சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஒருவருக்கு டயாலிசிஸ் செய்ய 4 மணி நேரம் ஆகும். அந்த வகையில் தினமும் 3 பிரிவுகளாக இந்த இயந்திரங்கள் பயன்பாட்டில் உள்ளன.

இதனை அதிகரிக்க ரோட்டரி சங்க நிர்வாகிகளிடம் மேலும் 11 டயாலிசிஸ் இயந்திரங்களை கேட்டிருக்கிறோம். இந்த கட்டிடம் பயன்பாட்டுக்கு வரும்போதே 25 டயாலிசிஸ் இயந்திரங்கள் பயன்பாட்டில் இருக்கும். இந்த மருத்துவமனையில் ரூ.1 கோடி செலவில் அதிநவீன வசதிகளுடன் கூடிய ரத்த வங்கி ஒன்றை ரோட்டரி சங்கம் ஏற்படுத்தித் தரவுள்ளது. அடுத்த மாதம் முதல் வாரத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இந்த மருத்துவமனையின் புதிய கட்டிடத்தை பயன்பாட்டுக்குக் கொண்டு வரவுள்ளார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## சிறுநீரக திருட்டை தொடர்ந்து கல்லீரல் கொள்ளை: திமுகவுக்கு அன்புமணி கண்டனம்



சென்னை, ஆக.20-

நாமக்கல் மாவட்டத்தில் பெருமளவில் சிறுநீரகக் கொள்ளை நடந்ததால் மக்களிடம் ஏற்பட்ட அச்சமும், பதட்டமும் விலகுவதற்கு முன் பாகவே, அதே மாவட்டத்தில் ஏழைகளைக் குறிவைத்து கல்லீரல் திருட்டும் நடைபெற்றிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன

இதுகுறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்: "நாமக்கல் மாவட்டத்தில் பெருமளவில் சிறுநீரகக் கொள்ளை நடந்ததால் மக்களிடம் ஏற்பட்ட அச்சமும், பதட்டமும் விலகுவதற்கு முன்பாகவே, அதே மாவட்டத்தில் ஏழைகளைக் குறிவைத்து கல்லீரல் திருட்டும் நடைபெற்றிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. போதைப் பொருள் விற்பனையில் தொடங்கி மனித உடல் உறுப்புத் திருட்டு வரை அனைத்து சட்டவிரோத செயல்களையும் திமுக அரசு ஊக்குவித்து வருவது கண்டிக்கத்தக்கது.

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகரத்தைச் சேர்ந்த 37 வயது பெண் ஒருவர் கந்து வட்டிக்கு வாங்கியக் கடனை அடைக்க முடியாமல் தடுமாறி வந்த நிலையில், ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் அவரை அணுகிய இடைத்தரகர்கள் அவரது சிறுநீரகத்திற்கு ரூ.8 லட்சம் விலை பேசியுள்ளனர். அவரை சென்னையில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று ஆய்வு செய்த போது அவரது சிறுநீரகத்தை மாற்ற முடியாது என்று தெரியவந்துள்ளது. அதனால், அவருக்கு மருத்துவ ஆய்வு செய்ய ஆன செலவுகளை தரும்படி அந்த பெண்ணை மிரட்டிய தரகர்கள், ஒரு கட்டத்தில் அவரது கல்லீரலை எடுத்துக் கொண்டு அதற்காக ரூ.4.5 லட்சத்தை மட்டும் கொடுத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் ரத்த உறவு இல்லாதவர்களுக்கு உடல் உறுப்புகளைக் கொடையாக வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், அனைத்து விதிகளையும் மீறி நாமக்கல் மாவட்டத்தில் வறுமையில் வாடும் மக்களை மூளைச்சலவை செய்து அவர்களின் சிறுநீரகங்களை திருடியுள்ளனர். சிறுநீரகத்தை எடுக்க முடியாத நிலையில் கல்லீரலைத் திருடியுள்ளனர். அப்படியானால், தமிழ்நாட்டில் உடல் உறுப்பு வணிகம் எந்த அளவுக்கு வெளிப்படையாக நடந்திருக்கிறது என்பதை தெரிந்து கொள்ளலாம்.

சிறுநீரகம், கல்லீரல் உள்ளிட்ட உடல் உறுப்புகளை கொள்ளையடித்த கும்பலைச் சார்ந்த முக்கியக் குற்றவாளிகள் எவரும் இன்னும் கைது செய்யப்படவில்லை. ஏமாற்றி அழைத்து வரப்பட்ட ஏழை மக்களிடமிருந்து சிறுநீரகங்களை பறித்து மற்றவர்களுக்கு பொருத்திய திருச்சி மருத்துவமனைகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக, அவற்றில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்வதற்கு மட்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஒரு மருத்துவமனை திமுக சட்டப் பேரவை உறுப்பினருக்கு சொந்தமானது என்பதால் தான் சலுகை காட்டப்பட் டிருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

சிறுநீரகம், கல்லீரல் போன்ற உடல் உறுப்புகளைத் திருடியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய திமுக அரசு, அவர்களுக்கு சாதகமாக செயல்பட்டு வருகிறது. சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்னும் ஒரு படி மேலே போய்,"தற்போது நடந்திருப்பது சிறுநீரக திருட்டு அல்ல; சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியாமல் எடுத்தால் தான் திருட்டு. இதை புரிந்துகொள்ள வேண்டும். இது திருட்டு அல்ல; முறைகேடு" என்று கூறியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் போதை மருந்துக் கடத்தல் முதல் உடல் உறுப்புத் திருட்டு வரை அனைத்தையும் செய்பவர்கள் திமுகவுடன் சம்பந்தப்பட்டவர்கள் தான். இத்தகைய சட்டவிரோத செயல்களை தடுத்து நிறுத்த வேண்டிய திராவிட மாடல் அரசு அத்தகைய குற்றங்களுக்கு துணை போகிறது. தமிழ்நாட்டில் ஏழை மக்களின் உடல் உறுப்புகளுக்குக் கூட பாதுகாப்பு இல்லாத சூழலை உருவாக்கியது தான் திமுக அரசின் சாதனை ஆகும். இதற்கெல்லாம் சேர்த்து வரும் தேர்தலில் திமுகவுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள்" என்று அன்புமணி கூறியுள்ளார்.



## பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயிலில் சதுர்த்தி விழா கொடியேற்றத்துடன் தொடக்கம்

திருப்பத்தூர், ஆக.20-

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் அருகே பிள்ளையார்பட்டியில் அமைந்துள்ள கற்பக விநாயகர் கோயிலில் சதுர்த்தி விழா கொடியேற்றுடன் நேற்று தொடங்கியது. பிரசித்தி பெற்ற கற்பக விநாயகர் கோயிலில் விநாயகர் சதுர்த்தி விழா 10 நாட்கள் விமரிசையாக நடைபெறுவது வழக்கம். அதன்படி, இந்த ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா, கொடியேற்றத்துடன் நேற்று தொடங்கியது.

இதையொட்டி, சண்டிகேசுவரர் சந்நிதியில் இருந்து கொடி புறப்பாடாகி, கோயிலை வலம் வந்தது.தொடர்ந்து, கொடி மரம் அருகே உற்சவ விநாயகர், சண்டிகேசுவரர், அங்குசத் தேவர் எழுந்தருளினர். பின்னர், கொடிமரத்துக்கும், மூஞ்சூறு வாகனம் வரையப்பட்ட கொடிப்படத்துக்கும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க கொடியேற்றம் நடைபெற்றது. விழா நாட்களில் காலையில் வெள்ளிக் கேடகத்திலும், மாலையில் சிம்மம், பூதம், கமலம், ரிஷபம், மயில், குதிரை உள்ளிட்ட வாகனங்களிலும் விநாயகர் எழுந்தருளி திரு வீதி உலா நடைபெறும்.

ஆகஸ்ட் 23ம் தேதி மாலை சூரனை விநாயகர் வதம் செய்யும் கஜமுக சூரசம்ஹாரம், 26ம் தேதி தேரோட்டம் நடைபெறும். அன்றைய தினம் மாலை 4.30 முதல் இரவு 10 மணி வரை ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் நடைபெறும் சந்தனக்காப்பு அலங்காரத்தில் மூலவர் கற்பக விநாயகர் பக்தர்களுக்கு காட்சியளிப்பார்.

ஆகஸ்ட் 27ம் தேதி விநாயகர் சதுர்த்தியன்று, அதிகாலையில் கோயில் நடை திறக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெறும். தொடர்ந்து, கோயில் திருக்குளத்தில் அங்குசத் தேவருக்கு தீர்த்தவாரி நடைபெறும். பிற்பகல் 2 மணிக்கு மூலவருக்கு முக்குறுணி மோதகம் படையலிடப்படும். இரவு பஞ்சமூர்த்தி சுவாமி புறப்பாடு நிகழ்ச்சியுடன் விழா நிறைவு பெறுகிறது.

## தொலைதூரக் கல்வி படிப்புகளில் ஆக.31 வரை மாணவர் சேர்க்கை நீட்டிப்பு

சென்னை, ஆக.20-

மத்திய அரசின் இந்திரா காந்தி தேசிய திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் (இக்னோ), சென்னை மண்டல முதுநிலை இயக்குநர் கே.பன்னீர்செல்வம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: இக்னோ தொலைதூரக் கல்வி திட்டம் வாயிலாக பல்வேறு பாடப் பிரிவுகளில் இளங்கலை, முதுகலை, டிப்ளமோ மற்றும் சான்றிதழ் படிப்புகளை வழங்கி வருகிறது. இந்த ஆண்டுக்கான ஜூலை பருவ மாணவர் சேர்க்கை முடிந்த நிலையில், மர்ணவர்களின் நலனை கருத்தில் கொண்டு கடைசி தேதி ஆக. 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

எனவே, சான்றிதழ் படிப்புகள் நீங்கலாக, மற்ற அனைத்து வகை இளங்கலை, முதுகலை, டிப்ளமா படிப்புகளில் மாணவர்கள் ஆகஸ்ட் 31 வரை சேரலாம். https://ignouadmission.samarth.edu.in என்ற இணையதள இணைப்பை பயன்படுத்தி விண்ணப்பிக்க வேண்டும். மாணவர் சேர்க்கை தொடர்பான கூடுதல் விவரங்களை பல்கலைக் கழகத்தின் இணையதளத்தில் (www.ignou.ac.in) அறிந்து கொள்ளளாம்.

## தமிழகத்தில் போதைப் பொருளால் இளைஞர்கள் சீரழிகின்றனர்: பழனிசாமி குற்றச்சாட்டு



கலசப்பாக்கம், ஆக.20-

'தமிழகத்தில் போதைப் பொருட் கள் புழக்கத்தால் இளைஞர்கள் சீரழிகின்றனர்' என்று அதிமுக பொதுச் செயலாளர் பனிசாமி குற்றம் சாட்டியுள்ளார். அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி 'மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற பிரச்சார பேரணி மூலமாக மக்களை சந்தித்து வருகிறார்.

அதன்படி, திருவண்ணாமலை மாவட்டம் அதிமுக தெற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட கலசப்பாக்கம் சட்டப்பேரவை தொகுதியில் வில்வாரணி நட்சத்திர கோயில் பகுதியில் நேற்று பரப்புரை மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது: திமுக கூட்டணி வலுவானது என்பதால் தேர்தலில் வெற்றி பெறுவோம் என ஸ்டாலின் பகல் கனவு காண்கிறார். அதிமுக கூட்டணிக்கு இன்னும் பல கட்சிகள் வருகின்றன. மக்கள்தான் எஜமானர்கள், தீர்மானிக்கும் அதிகாரம் படைத்தவர்கள். தமிழக த்தில் அதிமுக ஆட்சியையும் திமுக ஆட்சியையும் ஒப்பிட்டு, எது சிறந்தது என முடிவுசெய்து 2026 சட்டப்பேரவை தேர்தலில் முடிவை வழங்குங்கள்.

வாக்குறுதிகள் நிறைவேறவில்லை: 525 அறிவிப்புகளில் 10 சதவீதம் கூட நிறைவேற்றவில்லை. முழு பூசணியை சோற்றில் மறைக்கிறார். நீட் தேர்வு ரத்து செய்யவில்லை, ரகசியமும் சொல்ல வில்லை. அப்படி என்றால் பொய் சொல்லித் தானே ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் போதைப் பொருள் சகஜமாகிவிட்டது. இளைஞர்கள் சீரழிவதால் குடும்பங்கள் அழிகின்றன. இதற்கெல்லாம் முற்றுப் புள்ளி வைப்பதற்கு வரக்கூடிய தேர்தலில் அதிமுக கூட்டணி வெல்ல வேண்டும்.

எல்லா துறையிலும் ஊழல் நடக்கிறது. பணம் கொடுக்காமல் எதுவும் நடக்காது. டாஸ்மாக்கில் பாட்டிலுக்கு 10 ரூபாய் கூடுதலாக பெறுவதால் வருடத்துக்கு ரூ.5,400 கோடியும், நான்காண்டுகளில் 22 ஆயிரம் கோடி ரூபாய் மேலிடம் போகின்றது. அப்படிப்பட்ட ஆட்சி தொடர வேண்டுமா..? என்றார்.

சுவாமி தரிசனம்: முன்னதாக, திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி நேற்று காலை சுவாமி தரிசனம் செய்தார். அவருக்கு சிவாச்சாரியார்கள் பிரசாதம் வழங்கினர். பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, ''தமிழகத்தைச்சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணனை குடியரசு துணைத் தலைவராக தேர்வு செய்வது தமிழ்நாட்டுக்கு பெருமை.

கட்சி பேதமின்றி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களவை உறுப்பினர்களும் அவரை வெற்றி பெறச் செய்ய ஆதரவு அளிக்க வேண்டும்" என்றார். முன்னாள் அமைச்சர்களும், மாவட்ட செயலாளர்களுமான அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, சேவூர் எஸ்.ராமச்சந்திரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.




காரைக்குடி பிரமிடு IAS அகடமியின் நீட் தேர்வுக்கான இலவச பயிற்சி மூலம்

## 14 அரசு பள்ளி மாணவர்கள்- 4 அரசு அல்லாத தனியார் பள்ளி மாணவர்களின் மருத்துவராகும் கனவு நிறைவேறியுள்ளது

சிவகங்கை, அக.20-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி பிரமிடு IAS அகடமியின் நீட் தேர்வுக்கான இலவச பயிற்சி மூலம் மருத்துவராகும் கனவு நிறை வேறியுள்ளது 14 அரசு பள்ளி மாணவர்கள் மற்றும் 4 அரசு அல்லாத தனியார் பள்ளி மாணவர்கள் காரைக்குடி பிரமிடு IAS அகடமி மூலமாக, அரசு பள்ளிகளில், அரசு உதவி பயிலும் பள்ளிகளில் மற்றும் தனியார் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு ஒரு ஆண்டு நீட் தேர்வுக்கான இலவச பயிற்சி அளிக்கப்பட்ட நிலையில், இந்த ஆண்டுக்கான MBBS மற்றும் BDS படிப்புக்கான கலந்தாய்வு 30.07.2025 அன்று நடை பெற்றது. இந்த பயிற்சியில் பங்கு பெற்ற அரசு பள்ளி மாணவர்களில் பத்து மாணவர்களுக்கு MBBS படிப்பும், மூவருக்கு BDS படிப்பும் கிடைத்துள்ளது. தனியார் பள்ளிகளில் பயின்று இலவச பயிற்சி பெற்று கலந்தாய்வுக்காக காத்திருக்கும் மூன்று மாணவிகளுக்கு ஆகஸ்ட் முதல் வாரத்தில் நடைபெற இருக்கும் கலந்தாய்வில் எம் பி பிஎஸ் கிடைக்க மிகுந்த வாய்ப்பு உள்ளதாக பிரமிடு IAS அகடமி நிர்வாகக் குழு பெருமையுடன் தெரிவித்துள்ளது.



## ஆகஸ்ட் 18 முதல் அக்டோபர் 18 வரை நடமாடும் நம்பிக்கை மைய வாகனம் மற்றும் காசநோய் விழிப்புணர்வு வாகனம் ஆகியவைகள் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள பரிசோதனை முகாமினை,மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி கொடியசைத்து துவக்கி வைத்தார்

சிவகங்கை, ஆக.20-

சிவகங்கை மாவட்டத்தில், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டு பாட்டு அலகின் சார்பில், பொதுமக்களிடையே பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதில், ஒவ்வொரு வருடமும் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நாட்டுபுற கலைநிகழச்சிகள் ((Folk Media) மூலம் HIV/AIDS, கிரந்திநோய், காசநோய் மற்றும் இரத்ததானம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கிராமங்கள் தோறும் நடக்கிறது. மேலும் மாவட்டம் முழுவதும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் வினாடி வினா நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

அதன்படி, இந்த ஆண்டு ஆகஸ்ட் 12.08.2025 துவங்கி 12.10.2025ல் முடிவடிடைய உள்ளது.

சிவகங்கை மாவட்டம் முழுவதும் நடமாடும் நம்பிக்கை மைய வாகனம், காசநோய் வாகனம் மூலம் எச்.ஐ.வி, காசநோய், பால்வினை நோய் மற்றும் மஞ்சள்காமாலை பற்றிய விழிப்புணர்வு மற்றும் பரிசோதனை முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு, அதனடிப்படையில் ஆகஸ்ட் 18ம் தேதி முதல் அக்டோபர் 12ம் தேதி வரை மாவட்டம் முழுவதும் நடைபெறும் பொருட்டு, மேற்கண்ட வாகனங்கள் மாவட்ட ஆட்சியர் அவரால் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டது.

இவ்வாகனங்கள் மூலம், காசநோய் மற்றும் எச்ஜவி நோய் ஆகியவைகள் குறித்து, மாவட்டம் முழுவதும் விழிப்புணர்வு முகாம்கள் நடைபெறவுள்ளது. இதனை பொதுமக்கள் பயன்படுத்திக்கொண்டு, இவ்வாகனங்கள் மூலம் பரிசோதனை மேற்கொண்டு, தங்கள் உடல்நலத்தினை பேணிக்காத்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட எய்ட்ஸ் கட்டுபாட்டு அலகின் திட்ட மேலாளர் க.நாகராஜன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




## மதுரையில் ஆகாஷ் கல்வி சேவை நிறுவனத்தின் (AESL) 16 வது ஆண்டு கொண்டாட்டம்

மதுரை, ஆக.20-

ஆகாஷ் எஜிகேஷனல் சர்வீசஸ் லிமிடெட் (ANTHE) 16 ஆண்டை சிறப்பாக கொண்டாடி அதன் தலைமை முயற்சியாக - ஆகாஷ் தேசிய திறன் தேர்வை (ANTHE 2025) நடத்துகிறது. இதில் 250 கோடி ரூபாயில் மதிப்புள்ள 100% வரை கல்வி உதவித்தொகைகளை வழங்குகிறது. இஆகாஷ் இன்விக்டஸ் ஏஸ் டெஸ்ட் வகுப்பு 5 முதல் 12 வரை மாணவருக் காக 2.5 கோடி மதிப்புள்ள பண பரிசுகளுடன் தொடங்கயுள்ளது. கடந்த ஆண்டில் 1 மில்லியனை தாண்டிய மாணவர்கள் தேர்வில் போட்டியிட்டு புதிய சாதனையை ஏற்படுத்தினர். தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு Aakash கிளாஸ்ரூம், Aakash டிஜிட்டல், மற்றும் Invictus படிப்புகளில் கல்வி உதவித்தொகைகள் வழங்கப்படும். மேலும் JEE தேர்வு முன்னேற்பாட்டு கல்விக் கூட்டுத் தேர்வையும் (https://anthe. aakash. ac.in/home) ஆகஸ்ட், செப்டம்பரில் ஆகாஷ் நடத்தவுள்ளது. ஆகாஷ் கல்வி சேவைகள் லிமிடெட் (ஏஇஎஸ்எல்) தலைமை அதிகாரியும் மேலாள ருமான தீபக் மெஹ்ரோத்ரா கூறுகையில் : ஆகாஷ் டிஜிட்டல் 2.0 மற்றும் ஆகாஷ் இன்விக்டஸ். ஆகாஷ் டிஜிட்டல் 2.0 என்பது அனைத்து AESL சேவைகளையும் இணையதளத்தில் ஒருங்கிணைத்து, AI மூலம் தனிப்பட்ட, மலிவு விலை மற்றும் தீவிரமான பயிற்சியை NEET, JEE மற்றும் ஒலிம்பியாட்கள் தேர்வுகளுக்கான மாணவர்களுக்கு வழங்கும் ஒரு சக்திவாய்ந்த கல்வி தளம். இதனைத் தவிர ஆகாஷ் இன்விக்டஸ் என்பது இந்தியாவின் திறமையான பொறியியல் மாணவர்களுக்கு உருவாக்கப்பட்ட முதல் வகை JEE Advanced சிறப்பு பயிற்சி திட்டம் ஆகும். ஒவ்வொரு மாணவரும் பிரச்சினைகளை தீர்க்கும் திறன் கொண்டவர்கள், நுட்பமாக சிந்தித்து சவால்களை எதிர்கொண்டு தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று எங்கள் ஆகாஷ் கல்வி சேவை நிறுவனம் (AESL) நம்புகிறது என்று தெரிவித்தார்.



## சதுரங்கப் போட்டியில் அழகப்பா அரசு கலைக் கல்லூரி ஆடவர் அணி வெற்றி

சிவகங்கை, ஆக.20-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக அனைத்து கல்லூரிகளுக்கு இடையிலான ஆடவர் சதுரங்கப் போட்டியானது பரமக்குடியில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்றதில் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரி ஆடவர் சதுரங்க அணியினர் இரண்டாம் இடத்திற்கான கோப்பையை வென்றனர். வெற்றி பெற்ற வீரர்களை அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தி உடற்கல்வி இயக்குநர் அசோக்குமார் மற்றும் பேராசிரியர்கள் பாராட்டினர்.

## சிவகங்கை மாவட்டம் மதகுபட்டி ,காளையார் கோவில் ,சாலை கிராமம். ஆகிய துணை மின் நிலையங்களில் நாளை மின்தடை



சிவகங்கை, ஆக.20-

நாட்டரசன்கோட்டை, புலியடிதம்பம், பள்ளித்தம்மம், சருகணி, பொன்னலிக்கோட்டை, கொல்லங்குடடி, கள்ளத்தி, கருங்காலி, கருமந்தக்குடி, சாத்தரசன்கோட்டை, பெரியகண்ணனூர், ஒய்யவந்தான். மதகுபட்டி துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராரிப்பு நடைபெறுவதால், மதகுபட்டி, அலவாக்கோட்டை, சிங்கினிப்பட்டி, அம்மச்சிப்பட்டி, நாமனூர், உசிலம்பட்டி, அழகமானேரி, திருமலை, கல்லராதினிப்பட்டி, வீரப்பட்டி, கீழப்பூங்குடி, பிரவலுர், பேரணிப்பட்டி, ஒக்கூர் சாலைக்கிராமம், அய்யம்பட்டி, கலங்காதன்கோட்டை, ஆக்க வயல்,கோட்டையூர், சிறுபாலை, அளவிடங்கான் பூலாங்குடி, வண்டல் சூராணம்,சாத்தனூர், பஞ்சனூர், சமுத்திரம் ஆகிய துணை மின் நிலையங்களில் மின்தடை இருக்கும் என மின் உதவி செயற் பொறியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 18வது வார்டுக்குட்பட்ட பள்ள விளை அங்கன்வாடி மைய கட்டிடத்தில் சீரமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ். தொடங்கி வைத்தார். உடன் துணை மேயர் மேரி பிரின்ஸி லதா மண்டல தலைவர் செல்வகுமார், மாமன்ற உறுப்பினர் அமல செல்வன், பகுதி செயலாளர் சேக் மீரான் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் தி மு க நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 34வது வார்டுக்குட்பட்ட தட்டான்விளை பார்க் சாலையிலிருந்து அம்மன் கோவில் செல்லும் சாலையில் ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார். உடன் துணை மேயர் மேரி பிரின்ஸி லதா மாமன்ற உறுப்பினர் தினகரன், பகுதி செயலாளர் .துரை வட்ட செயலாளர் ஜானகிராமன் இளைஞரணி நிர்வாகிகள் அருள்செல்வின் நவீன் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் தி மு க நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





■ மதுரை மாவட்டம் பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரர்கள் சங்கம் சார்பில் ஓய்வு அறை துவக்கப்பட்டு இரண்டாம் ஆண்டு விழா நடைபெற்றது. இதில் முன்னதாக கர்னல் பென்னிகுவிக் சிலைக்கு பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்பு பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள், அரசு அதிகாரிகள், அலுவலர்கள், பொதுப்பணித்துறை ஒப்பந்ததார நண்பர்கள் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். ஓய்வு அறையில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இதற்கான ஏற்பாடுகளை தலைவர் நாகராஜன் செயலாளர் முருகன் பொருளாளர் கணேசன் மற்றும் ஒப்பந்ததாரர்கள் அனைவரும் சிறப்பாக செய்தனர்.

15 ஆண்டுகளாக இழுத்தடிக்கப்படும் ராதா நகர் ரயில்வே சுரங்கப்பாலத்திற்கு தீர்வு

## குரோம்பேட்டை ராதாநகர் சுரங்கப்பால பணிகளுக்கு ரயில்வே நிர்வாகம் நிலம் ஒதுக்கியதால் விரைவில் பணிகள் நிறைவடைய உள்ளது

குரோம்பேட்டை, ஆக.20-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டை ராதா நகர் ரயில்வே கேட் பகுதியில் ரயில்வே கேட் அடிக்கடி மூடப்படுவதால் கிழக்கு குரோம்பேட்டை பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் கடும் அவதிப்பட்டு வந்தனர் இதனை கருத்தில் கொண்டு கடந்த 2010 ஆம் ஆண்டு திமுக ஆட்சியில் ராதா நகர் ரயில்வே சுரங்கப்பாதை பணிகள் தொடங்கப்பட்டது அதன் பிறகு

பல்வேறு வழக்குகள் காரணமாக 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்த பணிகள் நடைபெறவில்லை

இதை தொடர்ந்து பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததையடுத்து உடனடியாக பணிகளை தொடங்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது



2019 ஜூன் மாதத்தில் 15 கோடியே 47 லட்சம் செலவில் டெண்டர் விடப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டது பணிகள் ஆமை வேகத்தில் நடைபெற்ற நிலையில் 2021 ஆம் ஆண்டு மீண்டும் திமுக ஆட்சி அமைந்ததும் இந்த பணிகள் வேகப்படுத்தப்பட்டன

ரயில்வே தண்டவாளத்தின் அடியில் இருபுறமும் சுரங்கப்பாலம் அமைக்கப்பட்டு பணிகள் முடிவுற்ற நிலையில் குரோம்பேட்டை ராதா நகரில் இருந்து பொது மக்கள் ரயிலிலும் செல்ல ஏதுவாக டிக்கெட் கவுண்டர்கள் சென்று டிக்கெட் எடுக்க வசதியாக ரயில்வே பிளாட்பாரத்திற்கும் ஜிஎஸ்டி சாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் ரயில்வே துறையினரால் நடந்து செல்லும் பாதை 3 மீட்டர் அகலத்திற்கு தற்போது பணிகள் நடந்து முடியும் தருவாயில் உள்ளது ஜிஎஸ்டி சாலையிலிருந்து ரயில்வே சுரங்கப்பாதைக்கு நான்கு சக்கர வாகனங்கள் செல்ல ரயில்வே துறையினிடமிருந்து 3 மீட்டர் நீளம் 30 மீட்டர் அகலத்திற்கு நிலம் கூடுதலாக தேவைப்பட்டது

இது தொடர்பாக நெடுஞ்சாலை துறை அதிகாரிகளுடன் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ கருணாநிதி சென்னை ரயில்வே கோட்ட மேலாளரை சந்தித்து மனு அளித்திருந்தார இந்த நிலையில் ரயில்வே அதிகாரிகள் அந்த இடத்தை ஆய்வு செய்து தற்போது நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

ரயில்வே நிலம் ஒதுக்கிய பகுதியில் நேற்று ரயில்வே துறை அதிகாரிகள் நெடுஞ்சாலை துறை அதிகாரிகளுடன் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி ஆய்வு செய்தார்

மண்டல தலைவர் ஜோசப் அண்ணாதுரை, பகுதி செயலாளர் பெர்னார்ட், மாநகராட்சி அதிகாரிகள் உடன் வந்தனர்

ரயில்வே நிலம் ஒதுக்கியதால் பணிகளை விரைவாக முடித்து ஒரு மாதத்திற்குள் ராதா நகர் சுரங்கப்பாலத்தை திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்



# அகில பாரத ஐயப்பா சேவா சங்கம் கிளை அலுவலகம் திறப்பு

மதுரை, ஆக.20-

மதுரை அகில பாரத ஐயப்ப சேவா சங்கர் மதுரை மாவட்ட யூனியன் ஒத்தக்கடை கிளை இன்று திறக்கப்பட்டது மதுரை மாவட்ட தலைவர் குருசாமி முன்னிலை வகித்தார். அலுவலகத்தை தமிழ் மாநில அமைப்பின் தலைவர் விசுவநாதன் திறந்து வைத்தார் மதுரை உயர்நீதிமன்ற அமர்வு நீதி அரசர் கே.கே. ராமகிருஷ்ணன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி வாழ்த்துரை வழங்கினார். ஒத்தக்கடை கிளை சார்பாக கள்ளழகர் எதிர்ச வையின் போது மதுரை மாவட்ட யூனியனுடன் இணைந்து மதுரை தல்லாகுளத்தில் பக்தர்களுக்கு நீர்மோர், பிஸ்கட், அன்னதானம் வழங்கினர். மேலும் பள்ளி மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம் வழங்கவும் இலவச மருத்துவ முகாம் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள் வழங்க உள்ளதாகவும் மாவட்ட யூனியனுடன் இணைந்து அன்னதானம், கோசா மடம் பராமரிப்பு மேற்கொள்ள உள்ளதாகவும் கிளைத் தலைவர் எஸ் நடராஜன் செயலாளர் கண்ணன் பொருளாளர் முத்து மணி ஆகியோர் தெரிவித்தனர் இவ்வலுவலகத் திறப்பு விழாவில் மதுரை மாவட்ட நிர்வாகிகள் கிளை உறுப்பினர்கள் ஐயப்ப பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் விழாவிற்கான ஏற்பாடுகளை மகேந்திரன் அங்குசாமி மற்றும் கிளை உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர் திருமோகூர் காலமேகப் பெருமாள் கோவிலில் நடைபெறும் திருவிழா காலங்களில் அன்னதானம் பிற சேவைகள் வழங்க உள்ளதாகவும் தெரிவித்தனர்.

# சாலைக் கிராமம் பகுதியில் ஒத்துவரலையினா ஒட்டப்படும் போஸ்டர் கலாச்சாரம்: அடாவடி தலையீடு, அக்கிரமத்தை தடுத்த இன்ஸ்பெக்டர் சமுதாய மக்களை திசைதிருப்பும் சமூக விரோதிகள்

இளையான்குடி, ஆக.20-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அருகே சாலைக்கிராமம் காவல் ஆய்வாளராக சாதுரமேஷ் உள்ளார். இவர் பணியில் சேர்ந்த மூன்று மாதங்களில் குற்ற வழக்கு மற்றும் திருட்டு இல்லை. என அப்பகுதி மக்களால் பேசப்பட்டு வருகிறது. பிரச்சினை ஏற்படும் நிலையறிந்து சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணை செய்து அதற்குரிய சுமூக நடவடிக்கை எடுப்பவர். மேலும் இருதரப்பு பிரச்சினையில், மூன்றாம் தலையீடு மற்றும் சிபாரிசு என்ற போர்வையில் தேவையற்ற தலையீட்டை அனுமதிக்காமல் இருதரப்பையும் மட்டும் நேருக்கு நேராக விசாரணை செய்து, சரியான நடவடிக்கையை எடுப்பவர் என பெயர் பெற்றவர். ஆனால் சில சமூக விரோதிகள் இந்த நடைமுறையை வெறுத்து, நாங்கள் சொல்லும்




நபருக்கு ஆதரவாக நடவடிக்கைகள் இருக்க வேண்டும், புகார் பதிய வேண்டும், என அழுத்தம் கொடுத்துள்ளனர். மேலும் தேவையில்லாமல் காவல்நிலையத்தில் வலம் வருவது, சும்மா பார்த்து விட்டு போகலா மென வந்தேன் என பில்டப் ஆசாமிகளின் நடமாடாடத்தை அடியோடு நிறுத்தி வைத்தார் ஆய்வாளர் சாது ரமேஷ். மேலும் கடந்த சில ஆண்டுகளாக சாலைக்கிராமம் காவல் நிலையத்தை, பெட்டிசன் , மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கிராமத்திற்கும், சமூகத்திற்கும், தேவையற்ற கேள்விகள் கேட்டு மிரட்டி காவல் நிலையத்தை மறைமுகமாக தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது ஆய்வாளரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. அதனால் சமூக ஆர்வலர்கள் என்ற பெயரில் காவல்நிலையத்தில் கட்டப்பஞ்சாயத்து, சிபாரிசு செய்ய வரும் நபர்களை எச்சரித்து அனுப்பி வைத்துள்ளார். அதனால் காவல்நிலையத்தில் மட்டும் இல்லாமல் கிராமத்திலும் தங்களது செல்வாக்கு குறைந்தால் எரிச்சலடைந்த பில்டப் ஆசாமிகள் சில பேர், ஒரு சமுதாயத்தை காவல்நிலையத்திற்கு எதிராக, காவல் ஆய்வாளருக்கு எதிராக திசை திருப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அதன் விளைவாக கிராமத்தில் ஓரிரு இடங்களில் ஆய்வாளர் சாது ரமேஸ்சிற்கு எதிராக போஸ்டர்கள் ஒட்டப்பட்டது. அமைதியான கிராமத்தில் ஒரு சமுதாயத்தை காவல் ஆய்வாளருக்கு எதிராக திசை திருப்பும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அதே பகுதியை சேர்ந்த லெனின் கூறியதாவது... நானும் அதே சமுதாயத்தை சேர்ந்தவன். எனக்கு தெரிந்த வரையில் ஆய்வாளர் நேர்மையாக விசாரணை செய்பவர். எந்த பகட்டுக்கும் மயங்காதவர். ஒத்து வந்தால் பணிவிடை செய்வதும், ஒத்து வரவில்லை என்றால் போஸ்டர் ஒட்டுவதும் சில ஆசாமிகளுக்கு இதுதான் வேலை. விசாரணையில் சிபாரிசு மற்றும் மூன்றாம் தலையீட்டை விரும்பாதவர். இது காவல்நிலையத்தால் ஆதாயமடைந்தவர்களுக்கு பிடிக்கவில்லை. தனிநபர் காழ்ப்புணர்ச்சிக்கு ஒட்டுமொத்த சமுதாயத்தை ஆய்வாளருக்கு எதிராக திசை திருப்புவது ஏற்புடையதல்ல. அவர்களை அடையாளம் கண்டு மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.



# பிரசித்தி பெற்ற வண்டலூர் இரணியம்மன் கோவிலில் ஆடி மாத திருவிழாவில் கலந்து கொண்ட நடிகர் கிங்காங் பங்கேற்பு

வண்டலூர், ஆக.20-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த வண்டலூர் பகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற இரணியம்மன் கோவிலில் ஆடி மாத கூழ் வார்த்தல் திருவிழா நடைபெற்றது இதில் நடிகர் கிங் காங் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்.

அவருடன் ஆர்வமாக பொதுமக்கள் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

சிவ வாத்தியங்கள் செண்டை மேளம் முழங்க சிறப்பு பூஜை நடைபெற்றது திடீரென கோயில் மேற்குறையில் மலைப்பாம்பு ஒன்று வந்ததை பார்த்து அங்கே இருந்த பக்தர்கள் பரவசத்துடன் வணங்கியதோடு புகைப்படங்களும் எடுத்துக் கொண்டனர்.

சென்னையில் இருந்து தன் மாவட்டங்களுக்கு செல்லும் வாகனங்கள் ஜிஎஸ்டி சாலையில் உள்ள இரணியம்மன் கோவிலில் பூஜை செய்துவிட்டு புறப்படுவது வழக்கம் இதனால் இந்த பகுதியில் மிகவும் பிரசித்தி பெற்ற கிராம தேவதையாக இந்த ஆலயம் அமைந்துள்ளது.

ஐந்தாவது வார ஆடி வெள்ளிக்கிழமையில் முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு அலங்கார கூழ்வார்கள் நிகழ்ச்சியில் அப்பகுதியை சார்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய நடிகர் கிங் காங்:

படப்பிடிப்பு சம்பந்தமாக தன் மாவட்டங்களுக்கு இந்த சாலையை கடந்து சென்றால் நான் இரணியம்மன் கோவிலில் எனது வாகனத்தை பூஜை செய்துவிட்டு தான் செல்வேன்.

அப்படி செய்யும் பொழுது அனைத்தும் வெற்றியாக நடைபெற்றுள்ளது.

மிகவும் சக்தி வாய்ந்த அம்மன் எனக்கு தெரிந்து இரணி அம்மன் என்ற பெயரில் வேறு எங்கும் ஆலயம் இல்லை என நினைக்கிறேன் நீங்களும் இந்த சாலையை கடக்கும் பொழுது வழிபட்டு விட்டு சென்றால் உங்களுக்கும் வெற்றி கிடைக்கும் என கூறினார்.

அதன்பின் செய்தியாளர்களை சந்தித்த ஆலய நிர்வாகி வண்டலூர் என பெயர் வருவதற்கு முக்கியமான காரணமாக உள்ள இந்த ஆலயத்தை தற்காலிகமாக இந்து அறநிலையத்துறை கைப்பற்றியுள்ளது.

அது மட்டும் இன்றி பூர்வீகமாக இருந்த இடத்தை விட்டு வேறு இடத்தில் இந்த ஆலயம் வைக்கப்பட்டுள்ளது.

தற்போது சாலை விரிவாக்க பணி மற்றும் மெட்ரோ ரயில் திட்டத்திற்காக ஆலயத்தை அகற்ற வேண்டும் என அரசு கூறவருகிறது. பூர்வீகமாக இருந்த இடத்தில் ஆலயத்தை வைக்க வேண்டும் மேலும் ஆலயத்திற்கு இட ஒதுக்க வேண்டும் வாகனங்களை நிறுத்தி பூஜை செய்வதற்கு இடங்கள் ஒதுக்க வேண்டும் பூர்வீகமாக நடக்கும் ஆகம விதிப்படி பூஜைகள் நடக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்

அதுமட்டுமின்றி நாங்கள் இந்த கோவில் மற்றும் ஊர் சார்ந்தவர்கள் காங்கிரஸ் பாஜக திமுக போன்ற அனைத்து கட்சிகளிலும் இருக்கிறோம் கட்சிகளில் வேறுபட்டிருந்தாலும் ஆலயம் என வரும் பொழுது ஒன்றாக சேர்ந்து மிகப்பெரிய போராட்டத்தை நடத்த வேண்டியது இருக்கும் என தெரிவித்தனர்.



■ மதுரை ரோஸ்கோர்ஸ் சாலையில் உள்ள அரசு அச்சகத்தில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆய்வு செய்து பார்வையிட்டார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் வே.ராஜாராமன் மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் ஆகியோர் உடன் உள்ளனர்



■ மதுரை காந்தி நினைவு அருங்காட்சியாத்தில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் ஆய்வு செய்து பார்வையிட்டார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.வே.ராஜாராமன் இ.ஆ அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவி இ.ஆ.ப அவர்கள், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.கோ.தளபதி அவர்கள், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திருமுமூமிநாதன அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.





# பம்மலில் விநாயகர் சதுர்த்தி பண்டிகை முன்னிட்டு காவல் துறை சார்பில் ஆலோசனை கூட்டம்

பம்மல், ஆக.20-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் பெருநகர காவல் ஆணையாளர் அவர்களின் உத்தரவின்படி பம்மல் தனியார் திருமண மண்டபத்தில் பல்லாவரம் சரக காவல் உதவி ஆணையாளர் வெங்கட்குமார் அவர்களின் தலைமையில் விநாயக சதுர்த்தி பண்டிகை யொட்டி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்லாவரம், பம்மல், குன்றத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள இந்து அமைப்பின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். விநாயக சதுரத்தியை பண்டிகை முன்னிட்டு விநாயகர் சிலை அமைத்தல் மற்றும் ஊர்வலம் பாதுகாப்பு குறித்து உதவி ஆணையாளர் வெங்கட்குமார் அவர்கள் சட்ட விதிமுறை மற்றும் பாதுகாப்பு குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இதில் பல்லாவரம், பம்மல், சங்கர்நகர், குன்றத்தூர் ஆகிய காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் மற்றும் இந்து அமைப்பினர் நிர்வாகிகள் உட்பட ஏரளமனோர் கலந்து கொண்டனர்

# சாலையோர வியாபாரிகளுக்கான வாக்காளர் பட்டியலில் திருத்தம், நீக்கம் செய்து கொள்ள வாய்ப்பு

மதுரை, ஆக.20-

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் நடைபாதை விற்பனையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அடையாள அட்டை வழங்குதல் ஆகிய பணிகளின் அவசியம் கருதி, சாலையோர வியாபாரி களின் கணக்கெடுப்பு முடிக்கப்பட்டு 16994 வியாபாரிகள் பட்டியலிடப்பட்டனர்.

மேலும் பல்வேறு சாலையோர வியாபாரிகள், சங்கங்கள் மற்றும் பிரதிநிதிகள் கோரிக்கைகளின் அடிப்படையில் விடுப்பட்ட சாலையோர வியாபாரிகளை கண்டறியும் பொருட்டு வியாபாரிகள், வியாபாரம் செய்யும் இடத்திற்கே சென்று கூடுதல் கணக்கெடுப்பு பணி மாநகராட்சியின் சார்பில் மேற்கொள்ளப்பட்டது. இதில் 2555 சாலையோர வியாபாரிகள் மேலும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதன்படி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கணக்கெடுப்பின் வாயிலாக கண்டறியப்பட்ட 19549 சாலையோர வியாபாரிகளின் வாக்காளர் பட்டியல் விவரங்கள் மதுரை மாநகராட்சியின் ஐந்து மண்டல அலுவலகங்களில் அனைத்து சாலையோர வியாபாரிகளும் பார்வையிடுவதற்கு வசதியாக அறிவிப்பு பலகையில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வாக்காளர் பட்டியலில் ஏதேனும் திருத்தம், பிழை அல்லது நீக்கம் செய்ய விரும்பும் சாலையோர வியாபாரிகள் நாளை 20.08.2025 முதல் 26.08.2025 வரை அந்தந்த மண்டல உதவி ஆணையாளர் அவர்களிடம் உரிய சான்று மற்றும் ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் படி மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

# மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தலைமையில் நடைபெற்றது

தேனி, ஆக.20-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சினேஹா ப்ரியா, இ.கா.ப., அவர்கள், மதுரை மண்டல மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை காவல் கண்காணிப்பாளர் திரு.சந்திரசேகரன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு அரசின் சார்பில் போதைப் பொருட் களை முற்றிலும் ஒழிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்தவகையில், தேனி மாவட்டத்தில், போதைப் பொருட்களை முற்றிலும் ஒழித்திடும் விதமாக பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களிடையே போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணிகள், விழிப்புணர்வு நாடகங்கள், பல்வேறு விதமான போட்டிகள் நடத்துதல் மற்றும் பொதுஇடங்களில் விளம்பர பதாகைகள் வைத்தும், பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கியும், தெருக்கூத்துகள் மூலமும் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், மருந்தகங்களில் தடைசெய்யப்பட்ட மருந்துகளை விற்பனை செய்வதை தடுக்கவும், போதைப்





பொருள் விற்பனை மற்றும் புழக்கத்தினை தடுக்க சோதனைகளை அதிகப்படுத்த வேண்டும்.

தமிழக அரசால் உரிமம் வழங்கப்பட்டுள்ள இடங்களை தவிர்த்து மதுபானங்கள் விற்பனை செய்தல் மற்றும் மது அருந்துதல் கண்டறியப்பட்டால் அவர்கள் மீது சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தேனி மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜீலை மாதம் வரை காவல்துறையினரால் 255.579 கிலோ கிராம் கஞ்சா மற்றும் 163 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டு 271 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். தடைசெய்யப்பட்ட புகையிலை விற்பனையை தடுக்க நடத்தப்பட்ட ஆய்வுகளில் தற்போது வரை 296 கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டு, ரூ.75,25,000/ அபராதம் விதிக்கப்பட்டு, சுமார் 2042.864 கிலோ கிராம் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு 305 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேனி மாவட்டத்தில் போதைப்பொருட்கள் விற்பனை தொடர்பாக தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொண்டு, தேனி மாவட்டத்தை போதை இல்லா மாவட்டமாக மாற்ற சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, போதைப்பொருட்கள் உபயோகத்தை தடுப்பது குறித்து ஒவ்வொரு துறையினரின் பணி முன்னேற்றம் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில், துணை காவல் கண்காணிப்பாளர் (மதுவிலக்கு) திரு.சீராளன், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.கிறிஸ்டோபர்தாஸ், உதவி ஆணையர் (கலால்) திருமதி முத்துலெட்சுமி, மாவட்ட நியமன அலுவலர் (உணவு பாதுகாப்புத்துறை) மரு.சசிதீபா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே தலைமையில் நடைபெற்றது

திருப்பூர், ஆக.20-

மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது.

அந்த வகையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 490 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே அறிவுறு த்தினார்கள்.

தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் மூலமாக நவீன செயற்கை கால்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டிலான செயற்கை கால்களையும், 1 பயனாளிக்கு ரூ.5,000/ மதிப்பீட்டிலான காதொளி கருவியையும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) மகாராஜ், (தேர்தல்) திரு.ஜெயராம், (தாராபுரம்) தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.பக்தவச்சலம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திருமதி கல்பனா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி புஸ்பாதேவி, மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலர் திரு.சரவணக்குமார் மற்றும் அனைத்து அரசுத்துறைகளின் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## அமைச்சர்கள் சாமிநாதன், என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் ரூ.1.71 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்தார்



திருப்பூர், ஆக.20-

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ஃபெலிக்ஸ்ராஜா அவர்கள் தலைமையில் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சி மற்றும் சின்னகாம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, மூலதானம் நிதி மானியத்திட்டம் மற்றும் அயோத்திதாச பண்டிதர் வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.71 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல் படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நமது மாவட்டங்களில் இருக்கக்கூடிய திட்டப்பணிகளை அனைத்தும் விரைவாக மக்களுடைய பயன்பாட்டு ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். அந்த வகையில் இன்றைய தினம் தாராபுரம் நகராட்சி மற்றும் சின்னகாம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முடிவுற்ற திட்டப்பணியை திறந்து வைத்து புதிய திட்டப்பணிகளை துவக்கி வைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, 1,50,000 விவசாயிகளுக்கு மின்இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம், பள்ளிக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், தமிழ்புதல்வன் திட்டம், உழவரைத்தேடி வேளாண்மை ஃ உழவர் நலத்துறை உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இவ்வாறு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து, திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சி வார்டு எண்.19 வட்டாட்சியர் அலுவலகம் அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயனியர் நிழற்குடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, சின்னக்காம்பாளையம் பேரூராட்சி வார்டு எண் 13, செலாம்பாளையத்தில் மூலதனம் நிதி மானியத்திட்டத்தின் கீழ் ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் புதிய பேரூராட்சி அலுவலக கட்டடம் மற்றும் வார்டு எண்.13 காங்கயம்பாளையத்தில் அயோத்திதாச பண்டிதர் வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய நல கட்டடம் கட்டும் பணி என மொத்தம் ரூ.1.63 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், திருப்பூர் மாநராட்சி 4ம் மண்டலத்தலைவர்இல. பத்மநாபன், தாராபுரம் நகர்மன்றத்தலைவர் திரு.பாப்புக்கண்ணன், தாராபுரம் நகராட்சி ஆணையாளர் முஸ்தபா, சின்னகாம்பாளையம் பேரூராட்சித்தலைவர் திருமதி கன்னீஸ்வரி செல்லத்துரை, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சாரந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

## மக்கள் மனம் கவர்ந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்திஸ் IPS

ராமநாதபுரம், ஆக.20-

ராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பொறுப்பேற்றுக்கொண்ட நாள் முதல் இன்று வரை எண்ணற்ற பல சாதனைகளை புரிந்துள்ளார் உங்கள் ஊரில் உங்கள் SP சந்திப்பின் மூலம் மக்களிடம் நேரடி தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு அவர்களிடம் குறைகளை கேட்டு அதற்கான உடனடி தீர்வு உங்கள் ஊரில் உங்கள் SP முகாமின் மூலம் அந்தந்த ஊர்களில் படித்து சாதனை படைத்த மாணவ மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் வெகுமதி வழங்கி பாராட்டுதல் வாரம் தோறும் புதன்கிழமைகளில் குறைதீர் முகாம் மூலம் மாவட்டத்தில் உள்ள மக்களிடம் நேரடியாக மனுக்களை பெற்று அதற்கான உடனடி தீர்வு மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் சிசிடிவி கேமராக்கள் அமைக்கச் சொல்லி அதன் மூலம் சட்ட விரோத செயல்கள் நடப்பதை தடுத்து நிறுத்தி சாதனை படைத்துள்ளார் மாவட்டத்தில் தனது



கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் தனி பிரிவை சிறப்பாக செயல்பட வைத்து மாவட்டத்தில் நடைபெறும் அனைத்து விஷயங்களையும் உடனே ஆய்வு செய்து உடனடி தீர்வு காணுதல் குற்ற செயல்கள் மற்றும் சமூக விரோத செயல்கள் புரிந்தவர்களை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்திய காவலர்களுக்கு சன்மானம் கொடுத்து அவர்களை ஊக்குவித்தல் சைபர் கிரைம் போலீசார் மூலம் இழந்த பணங்களை உடனடியாக மீட்டுக் கொடுத்தல் இரவு நேரங்களில் திடீர் ஆய்வுகள் அனைத்து காவல் நிலையங்களிலும் ஆய்வு செய்து காவல் நிலையங்களை சிறப்பாக செயல்பட வைத்தல் ஆடி அமாவாசை காலங்களில் ராமேஸ்வரம் நகரை காவல்துறையின் கட்டுப்பாட்டில் வைத்து மக்களை காப்பாற்றுதல் அவர்களுக்கு உடனடி உதவி செய்தல் தமிழகத்திலேயே முதல் பெண் காவல் ஓட்டுனரை உருவாக்கி அவரை ஊக்குவித்தல் பணியின் போது உயிரிழந்த காவலர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதோடு மட்டுமல்லாமல் நிதி உதவி கொடுத்தல் சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளராக கூடுதல் பொறுப்பேற்றுக்கொண்டு கண்டதேவி தேரோட்டத்தை சிறப்பாக நடத்தி சாதனை படைத்து தமிழக அரசுக்கு பெருமை சேர்த்தார் இதுபோன்று போன்ற எண்ணற்ற சாதனைகளை படைத்து வரும் ராமநாதபுரம் மாவட்டம் காவல் கண்காணிப்பாளர் சந்தீஸ் மக்களின் மனம் கவர்ந்த காவல் கண்காணிப்பாளராக திகழ்ந்து வருகிறார் அவருக்கு மக்கள் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்து வருகின்றனர்.

## திருப்பூர் மாவட்டத்தில்“ உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் முகாம்

திருப்பூர், ஆக.20-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப்பகுதிகளில் “உங்களுடன்ஸ்டாலின்” திட்டத்தினை 15.07.2025 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்துள்ளார்கள்.

அதனை தொடர்ந்து, திருப்பூர் மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 325 முகாம்கள் நடைபெற உள்ளது. குறிப்பாக, முதல் கட்டமாக 120 முகாம்கள் 15.07.2025 முதல் 14.08.2025 வரை நடைபெற்றது. மேலும், இரண்டாம் கட்டமாக 96 முகாம்கள் 15.08.2025 முதல் 14.09.2025 வரையிலும், மூன்றாம் கட்டமாக 96 முகாம்கள் 15.09.2025 முதல் 14.10.2025 வரையிலும் மற்றும் நான்காம் கட்டமாக 13 முகாம்கள் 15.10.2025 முதல் 14.11.2025 வரையிலும் நடைபெறவுள்ளது.

அந்த வகையில் இரண்டாம் கட்டமாக 20.08.2025 அன்று காங்கேயம் நகராட்சி வார்டு எண்.13,14,15 ஆகிய பகுதிகளுக்கு அகிலாண்டபுரம் சிவாலயா மண்டபத்திலும், உடுமலைப்பேட்டை நகராட்சி வார்டு எண்.4,8,9 ஆகிய பகுதிகளுக்கு நாச்சிமுத்து லே அவுட் வாணி மஹாலிலும், மூலனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெரமியம், தூரம்பாடி, புஞ்சைத்தலையூர் ஊராட்சிகளுக்கு மூலனூர் எஸ்.ஜே.எம் மஹாலிலும், பல்லடம் ஊராட்சி ஒன்றியம், சித்தம்பலம் ஊராட்சிக்கு புள்ளியப்பம்பாளையம் விநாயகா மஹாலிலும், காங்கேயம் ஊராட்சி ஒன்றியம் பாப்பினி ஊராட்சிக்கு பாப்பினி என்.ஆர்.ஜி மண்டபத்திலும், திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் ஈட்டிவீரம்பாளையம் ஊராட்சிக்கு தட்டான்குட்டை பிருந்தாவன் மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. எனவே, திருப்பூர் மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நடைபெறவுள்ள “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தில் உங்கள் பகுதிகளில் ஒதுக்கப்பட்ட நாட்களில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு உரிய ஆவணங்களுடன் தங்கள் மனுக்களை வழங்கி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே தெரிவித்தார்.



## மேடவாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகம் வளாகத்தில் “உங்களுடன் ஸ்டாலின் முகாம்“

மேடவாக்கம், ஆக.20-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மேடவாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் (ஆகஸ்ட் :19) உங்களுடன் ஸ்டாலின் முகாம்

நடைபெற்றது. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், ச.அரவிந்த் ரமேஷ் முகாமை துவக்கி வைத்தார். தலைமை பொதுக்குழு உறுப்பினர்., மேடவாக்கம், ப . ரவி மற்றும் ஊராட்சி மன்ற தலைவர், சிவபுசணம் ரவி மற்றும் புனித தோமையார் மலை ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர், ஆர். எஸ். லோகேஸ்வரா அனைவரையும் வரவேற்று பொதுமக்களுக்கு தேவையான வசதிகளையும், உதவிகளையும் செய்து கொடுத்தார்கள். முகாமில்15 துறைகளை சேர்ந்த அரசு அதிகாரிகள் மனுக்களை பெற்று சில துறைகளில் மூலம் உடனக்குடன் தீர்வு காணப்பட்ட சான்றிதழ் மற்றும் நலத்திட்ட உதவி கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டிகளை எம். எல் .ஏ மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் வழங்கினர். நிகழ்வில் புனித தோமையார் மலை ஒன்றிய செயலாளர் , கோவிலம்பாக்கம், ஜி. வெங்கடேசன், ஒன்றிய கவுன்சிலர், கல்பனா சுரேஷ், ஊராட்சி செயலர், ரூபன் உள்ளிட்ட அனைத்து துறைகள் சார்ந்த அதிகாரிகள் புனித தோமையார் மலை ஒன்றிய திமுக கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து திரளாக கொண்டனர்.

## காரைக்குடியில் 1.700 கிலோ தங்கத்தை கொள்ளை அடித்த கும்பலை 48 மணி நேரத்தில் கண்டுபிடித்து தங்கத்தை மீட்ட காவல்துறையினர் :எஸ்.பி பாராட்டு

சிவகங்கை, ஆக.20-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி உட்கோட்டம் காரைக்குடி வடக்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியான காரைக்குடி பழைய பேருந்து நிலையம் அருகில் கடந்த 04.08.2025 ஆம் தேதி மதுரையைச் சேர்ந்த விஜயராஜன் என்பவர் வியாபாரம் நிமித்தமாக கொண்டு வந்த 1.700 கிலோ கிராம் எடை கொண்ட தங்க கட்டியை கஸ்டம்ஸ் அதிகாரிகள் என்று கூறி காரில் விஜயராஜனை ஏற்றிக்கொண்டு சுமார் 10 கிலோ மீட்டர் பயணம் செய்து காரில் வைத்து நான்கு நபர்கள் அடித்து நகையை பறித்துக் கொண்டு கானாடுகாத்தான் அருகே நடுவழியில் இறக்கி விட்டு சென்றதால் பாதிக்கப்பட்ட விஜயராஜன் காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்ததின் பேரில் உடனடியாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கை உடனடியாக விசாரித்து கண்டுபிடிக்க வேண்டி சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவ பிரசாத் உத்தரவின் பேரிலும் காரைக்குடி உட்கோட்ட காவல் உதவி கண்காணிப்பாளர் அஷிஷ் புனியா ஆலோசனையின் பேரிலும் காரைக்குடி வடக்கு காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் சித்திரைச் செல்வி, வடக்கு காவல் நிலைய சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் ராமச்சந்திரன் ஆகியோர் தலைமையில் சார்பு ஆய்வாளர் M.பிரேம்குமார், தலைமை காவலர்கள் இசக்கிதுரை, சிலம்பரசன், கென்னடி, திருச்செல்வம், முகமது சபி. ,பார்த்திபன், இளையராஜா, ஆயுதப்படை காவலர் பூபதி, பாண்டி ஆகியோர்கள் கொண்ட தனிப்படை அமைக்கப்பட்டு விசாரணை துரிதமாக முடுக்கி விடப்பட்டது. துரிதமாக செயல்பட்ட தனிப்படையினர் மதுரை சென்று மதுரையில் உள்ள நகைக்கடையில் பணிபுரியும் ஊழியர்களை விசாரித்ததில் நகை கடையில் பணிபுரிந்த ஊழியர் மீது சந்தேகம் இருந்தது. மேலும் சம்பவத்திற்கு பயன்படுத்திய கார் வரும் வழியில் உள்ள கண்கா ணிப்பு கேமராக் களை பார்வையிட்டு அதில் உள்ள கார் பற்றி விசாரணை செய்ததில் மதுரையில் இருந்து வந்தது தெரிய வந்தது. எனவே அங்கு பணியில் இருந்த ஊழியரான அபிமன்யு பற்றி ரகசியமாக விசாரணை செய்ததில் குற்ற சம்பவத்திற்கு மூளையாக செயல்பட்டு தனக்கு தெரிந்த மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த குற்றவாளிகள் சேட்டன். பிரசாந்த் துக்காராம் தேவ்பா ரிஷிகேஷ். சுமித் ஆகியோர்களை வைத்து இந்த கொள்ளையை நடத்தியது தெரியவந்தது.

துரிதமாக செயல்பட்ட தனிப்படையினர் மேற்கண்ட கைதிகளில் அபிமன்யு பிரசாந்தி துக்காராம் தேவ்பா ஆகியோர்களை 48 மணி நேரத்தில் கைது செய்தும் நீதிமன்ற காவல் அடைப்பிற்கு அனுப்பியும் கொள்ளையடித்து சென்ற நகைகள் மற்றும் கொள்ளைக்கு பயன்படுத்திய காரினை மீட்க வேண்டி மகாராஷ்டிரா சென்று மும்பை, நவி மும்பை சோலாப்பூர், சதாரா சாங்லி ஆகிய மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் விசாரணை செய்து காரினை கைப்பற்றியும் பின்பு தமிழ்நாடு வந்து முக்கிய குற்றவாளி சேத்தன் என்பவரை கைது செய்து அவரிடமிருந்து 1346 கிராம் எடையுள்ள தங்க கட்டிகளை கைப் பற்றியும் வந்து எதிரி சேத்தன் என்பவரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது. துரிதமாக செயல்பட்ட காவல் துறையினரை சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவ பிரசாத் பாராட்டினார்கள் மேலும் குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட மற்ற எதிரிகளை கண்டுபிடிக்கவும், மீதமுள்ள 354 கிராம் நகைகளை கண்டுபிடிக்கவும் உத்தரவிட்டுள்ளார்.



## தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மதுரை மேற்பார்வை பொறியாளர் இருளப்பனுக்கு அப்பழுக்கற்ற அரசு ஊழியர் சான்று

திருப்பூர், ஆக.20-

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் எந்தவித குற்றச்சாட்டுக்கும் ஆளாகாமல் 25 ஆண்டு பணிக்காலத்தினை நிறைவு செய்த 35 பணியாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி முருகன் சிஐடி நகர் வீட்டு வசதி வாரிய தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அப்பழுக்கற்ற அரசு ஊழியர் சான்று வழங்கி கௌரவித்தார். இதில் மதுரை தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மேற்பார்வை பொறியாளர் இருளப்பன் சான்றினை பெற்றார். இந்த நிகழ்ச்சியில் வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குனர் கணேசன் வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் பாலசுப்பிரமணியன் தலைமை பொறியாளர்கள் கண்ணன் சரவணன் உள்ளிட்ட வாரிய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161